5th July 1962]

These matters therefore require to be reviewed by the expert bodies. Government have therefore decided after very careful consideration that the opening of Standard XI in Secondary Schools due in 1962–63 may be deferred."

திரு. மீ. கல்யாணசுந்தரம்: முன்பு கல்வி அமைச்சராக இருந்தவர் ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு ஹைஸ்கூல்களுக்குக் குறையாமல் 11-வது வகுப்பை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு உத்தரவிட்டிருந்தார்களே. அந்த உத்தரவை ஒத்திவைத்த காரணம் என்ன? எப்போது ஒத்திவைக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் இப்போது வாசித்தது அந்த உத்தரவு தான். அதுவும் முன்பு கல்வி மந்திரியாக இருந்தவர் காலத்து இடப்பட்ட உத்தரவு தான் இது.

—

SRI R. V. SWAMINATHAN: Sir, in view of the importance of this matter, will the Hon. Minister give a chance to this House to discuss this matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: After all the exploratory talks with educational authorities and others concerned when we formulate certain proposals I will put them before the Educational Advisory Committee and then finally we will consult this House.

திரு. சா. கணேசன்: ப்ரீ யுனிவர்ஸிடி கோர்ஸ் என்று இருக்கிற வகுப்புக்கும் அதன் பெயருக்கும் பொருத்தமில்லாமல் இருக்கிறதே, இந்த வகுப்பை காலேஜில் தான் வைக்கவேண்டும், ஹைஸ்கூலில் வைக்கக் கூடாது, அதோடு இதற்கு வேறு பெயரையே கொடுப்பது உசிதமாக இருக்காதா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்கு இப்போதுள்ள அபிப்பிராயம் நிபுணர்களின் யோசனையைக் கேட்டு அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி நடந்துகொள்வது என்பதுதான். ப்ரீ யுனிவர்ஸிடி கோர்ஸ் கல்லூரியில்தான் இருக்க வேண்டும், ஹைஸ்கூலில் இருக்கக் கூடாது என்பது என் அபிப்பிராயம். இதையெல்லாம் மாற்றின பிறகு பெயர் வைத்துக்கொள்ளலாம். பெயர் வைக்கக் காலம் வரவில்லை.

சாலைகள்.

*136 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மொரக்குட்டி-எப்பனாடு வழியை தார் ரோடு போட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(இ) எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No amount has been allotted for the work.

(*b*) Does not arise.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த எப்பநாடு-மொரக்குட்டி ரோடுகளை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தார் ரோடாகப் போட வேண்டும் என்று பொதுமக்களால் கோரப்பட்டு என்ஜினியர்ஸ் ஆபீசுக்கு வந்திருக்கிறது. அதிகாரிகள்தான் எவ்வித சிரத்தையும் எடுத்துக்கொள்வதில்லையென்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். உடனடியாக அந்த ரோடைத் தார் ரோடாகப் போடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்படியாக கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா?

கனம் திரு. வி. ராமைய்யா: உடனடியாகக் குற்றம் சாட்டுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ரோடுக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவு ஆகும். 'ப்ரையாரிடி' படி வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். எதை முன்னால் எடுத்துக் கொள்வது, எதைப் பின்னால் எடுத்துக்கொள்வது என்பதை டெவலெப்மெண்டு கவுன்சில் முடிவு செய்யவேண்டும். இந்த ரோடு விஷயமாக இன்னும் டெவலெப்மெண்டு கவுன்சில் முடிவு செய்யவில்லை. அதற்குள் அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டுவது சரியல்ல.

* 137 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் பாதைகள் பராமரிப்பு வேலைக்காக 1961-62-ம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(இ) இதுவரை எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH: (a) Rs. 6,61,000.

(b) A sum of Rs. 7,28,200 has been spent during 1961–62.

திரு. ஜே. மாதா கவுடர்: சார், நீலகிரியில் இருக்கக்கூடிய ரோடுகளை எல்லாம் தார் ரோடாகப் போட்டால்தான் நன்றாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களும் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். அம்மாதிரி ரோடுகளைத் தார் ரோடாகப் போடுவதற்கு 6 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கியிருப்பதால், அது மிகமிகக் குறைவாக இருக்கும் என்ற காரணத்தினால் அதைக் குறைந்தது 3 மடங்காவது உயர்த்தவேண்டும், அதாவது 18 லட்சமாவது உயர்த்தவேண்டும், அப்போதுதான் அங்கேயுள்ள ரோடுகளைச் செப்பனிடமுடியும். அதற்கு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலாவது வகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா: கனம் அங்கத்தினர் 3 மடங்காகத் தான் ஆக்க வேண்டும் என்கிறார். என்னைப் பொறுத்த வரையில் எத்தனை மடங்கு ஆனாலும் சரி எல்லா ரோடுகளையும் உயர்ந்த ரக ரோடுகளாக உடனே ஆக்கிவிடவேண்டும் என்பது அபிப்பிராயம். ஆனால் அதற்கு நமக்குப்போதுமான பொருளாதார வசதி, நிபுணர்கள் வசதி எல்லாம் வேண்டும். இவற்றையெல்லாம் மனதில் வைத்துப் பார்க்கிறபோது நீலகிரி ஜில்லாவைப் பொறுத்து ஒதுக்கப்பட்ட தொகை நல்ல வகையில் செலவழிக்கப்படுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த